செ.வெ.எண் :- 478 தேதி :- 13/10/2016

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் **1800 425 6151** என்ற **கட்டணமில்லா தொலைபேசி எண்** இயங்கி வருகிறது. மேற்கண்ட தொலைபேசி எண் மூலம் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளில் பயணம் செய்யும்பொழுது அதிகக் கட்டணம் வசூலித்தல் சம்பந்தமான குறைகள் குறித்து புகார் தெரிவிக்கலாம். மேற்படி புகார் பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்படும்.

அனைத்துப் பொதுமக்களும் தங்களது புகார் மீதான உரிய நடவடிக்கைக்கு மேற்குறிப்பிட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு :- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை-9.